# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032

தொலைபேசி 044–22201337

மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in


**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)**

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 86/மா/2025**

நாள்:27.04.2026

A. செல்வகுமார்
தூத்துக்குடி --- முறையீட்டு மனுதாரர்

ஆணையர்
தூத்துக்குடி மாநகராட்சி --- எதிர்மனுதாரர்

தூத்துக்குடி, பொன் சுப்பையா நகர், லெட்சுமிபுரம், கதவு எண் 2–664–1, என்கிற முகவரியில் வசிக்கும் திரு. A. செல்வகுமார் என்பவரின் 04.01.2025 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 20.01.2025 அன்று பெறப்பட்டு, 86/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது:

## ஆணை

தூத்துக்குடி, பொன் சுப்பையா நகர், லெட்சுமிபுரம், கதவு எண் 2–664–1, என்கிற முகவரியில் வசிக்கும் திரு. A. செல்வகுமார் என்பவர் தனது 04.01.2025 நாளிட்ட மனுவில் இணைத்தனுப்பியுள்ள 24.06.2024 நாளிட்ட தூத்துக்குடி மாநகராட்சி ஆணையருக்கு முகவரியிட்ட மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:–

> "தூத்துக்குடி மாநகராட்சி ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட மல்டிலெவல் பார்க்கிங் காய்கனி மார்க்கெட் அருகில் இயங்கி வருகிறது. இப்பார்க்கிங்கில் வாகனங்கள் இயக்கப்பட்டு அதற்கான கட்டணம் மாநகராட்சியால் வசூலிக்கப்பட்டு வருகிறது. மேற்படி மல்டிலெவல் பார்க்கிங் வாகனங்களுக்கான கட்டணத்திற்கு உரிய ரசீது வழங்காமல் ரசீது வழங்கும் கருவி பழுது என்ற பெயரில் சில மாதங்களாக உரிய முறையில் மாநகராட்சிக்கு வரவேண்டிய வருவாய் மாநகராட்சி ஊழியர்களால் சுரண்டப்பட்டதாக தெரியவருகிறது. மேற்படி வருவாய் இழப்பு தொடர்பாக சம்பந்தப்பட்ட மேற்கு மண்டல உதவி ஆணையர், வருவாய் அலுவலர், வருவாய் உதவி அலுவலர் ஆகியோர் மீது நடவடிக்கை எடுக்காமல் இருப்பது ஒருதலை பட்சமான நடவடிக்கை என எண்ணத்தோன்றுகிறது. மாநகராட்சிக்கு வர வேண்டிய வருவாயை சுரண்டியது குற்றம். அதே சமயத்தில் அக்குற்றத்தை நடைபெற விடாமல் தடுக்க வேண்டிய பொறுப்பு மேற்கண்ட அதிகாரிகளுக்கும் உண்டு. மேற்படி அதிகாரிகள் தங்களது பணியினை சரிவர செய்திருந்தால் மாநகராட்சிக்கு இவ்வருவாய் இழப்பு ஏற்பட்டிருக்காது என்பது மறுக்கமுடியாத, மறைக்கமுடியாத உண்மை. தனக்கு கீழ் உள்ள ஊழியர் மாநகராட்சிக்கான வருவாயினை முறைப்படி மாநகராட்சிக்கு

ஒப்படைப்பதை உறுதி செய்ய வேண்டிய பொறுப்பு கண்டிப்பாக மேற்கண்ட அதிகாரிகளை சார்ந்தது. அப்படி இருக்கும் சூழலில் மேற்படி அதிகாரிகளுக்கு குறிப்பாணை வழங்கியோ விளக்கம் கேட்டோ எவ்வித நடவடிக்கையும் எடுத்தது போன்று தெரியவில்லை. மேற்படி வருவாய் அலுவலர் மாநகராட்சி அதிகாரிகளுக்கு தனிப்பட்ட முறையில் சில சலுகைகள் செய்வதால் அவரை தண்டனையிலிருந்து காப்பாற்றி இருப்பதாக சந்தேகம் எழுகிறது. மேற்படி அதிகாரிகள் தங்களது சம்பள பணத்தில் ஏதேனும் குளறுபடிகள் ஏற்பட்டால் இதே போன்று அலட்சியமாக இருப்பார்களா என்று கவனத்தில் கொள்ள வேண்டும். கீழ்நிலை ஊழியர் தவறு செய்தாலும் அத்தவறை கண்டுபிடிக்காமல் இல்லை கண்டுபிடித்தும் கண்டுபிடிக்காதது போல் மேற்படி அதிகாரிகள் இருந்தார்களா என்பதை கண்டிப்பாக விசாரணை செய்து விசாரணையின் அடிப்படையில் நடவடிக்கை மேற்கொண்டால் தான் மாநகராட்சிக்கு வருவாய் இழப்பு ஏற்படும் வகையில் செயல்பட அதிகாரிகள் பயம் கொள்வார்கள். எனவே இதேபோன்று வேறு ஏதேனும் வருவாய் இழப்பு ஏற்படுத்தும் வகையிலான செயல்கள் நடைபெற்றனவா என்பதை முறையாக தணிக்கை செய்து மேற்படி அதிகாரிகள் அனைவரிடம் இருந்தும் மாநகராட்சிக்கு ஏற்பட்ட இழப்பீட்டுத் தொகையை கணக்கிட்டு அதற்கு வட்டியும் சேர்த்து அவ்விழப்பை சரி செய்ய வேண்டும் எனவும் தன் கடமையை செய்யத் தவறிய மேற்படி அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பொதுமக்களிடம் வரிஇனங்களை விரைவாக செலுத்த வேண்டும் என தங்களது அதிகாரத்தை செலுத்தி கேட்கக்கூடிய மேற்படி அதிகாரிகள் தனக்கு கீழ் உள்ள ஊழியர் மாநகராட்சிக்கு வருவாய் இழப்பை ஏற்படுத்தியதை தெரியாமல் இருப்பது வியப்பளிக்கிறது. எனவே இவ்விசயத்தில் மாநகராட்சி ஆணையர் அவர்கள் நியாயமாக ஒரு தலைபட்சம் இன்றி மாநகராட்சிக்கு வருவாய் இழப்பு ஏற்படுத்திய அனைவர் மீதும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.''

2. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ 27.03.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் தூத்துக்குடி மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது. 30.09.2025 மற்றும் 01.12.2025–ல் நினைவூட்டு கடிதங்களுக்கும் அனுப்பப்பட்டது.

3. எதிர்மனுதாரர் தரப்பில் தூத்துக்குடி மாநகராட்சி மேற்கு மண்டல உதவி ஆணையாளரின் கடிதம் ந.க. எண் அ1/1666/2025 நாள் 12.08.2025–ல் கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்.

''மனுதாரர், திரு.காளிதாஸ் என்பவர் மீது தூத்துக்குடி மாநகராட்சியில் பணம் கையாடல் குறித்து சுமத்தப்பட்ட புகார் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கையினை தெரிவிக்க கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. மேற்படி புகாருக்கு உள்ளான திரு.காளிதாஸ் அலுவலக உதவியாளரை பணி ஏற்பாட்டின் கீழ் மாநகராட்சி மேற்கு மண்டலத்திற்குட்பட்ட இரு சக்கர வாகன காப்பகத்தில் வரும் வாகனங்களுக்கு கட்டணம் வசூல் செய்யும் தொகையினை மாநகராட்சி கருவூலத்தில் செலுத்தி ரசீது பெற்று பதிவேடு பராமரிக்கப்பட்டு வந்த நிலையில், அன்னார் ஏப்ரல் 2024 முதல் ஜூன் 2024 வரை வசூல் செய்த தொகையினை முறையாக கருவூலத்தில் செலுத்தாமல் வரப்பெற்றது கண்டு பிடிக்கப்பட்டது. அதனை தொடர்ந்து தற்காலிக பணியிடை நீக்கம் செய்யப்பட்டது. அன்னார் அதனை எதிர்த்து மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு எண் W.P.No.18769/2024-ல் தொடர்ந்த வழக்கின் 02.08.2024 நாளிட்ட நீதிமன்ற உத்தரவின்படி மனுதாரரை மீண்டும் பணியில் சேர்த்து தமிழ்நாடு அரசு பணியாளர்களுக்கான ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு விதி 17(b)-ன் கீழ் குற்றச்சாட்டுகள் ஏற்படுத்தப்பட்டு விசாரணை அலுவலர் நியமனம் செய்யப்பட்டு ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் உள்ளது.

மேலும், இப்பொருள் தொடர்பாக ஆணையாளர் அவர்களின் உத்திரவின்படி காவல் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறைக்கு புகார் கடிதம் அனுப்பப்பட்டு அனைத்து அசல் ஆவணங்களும் ஒப்படைக்கப்பட்டு விசாரணை நடைபெற்று வருகிறது என்ற விபரம் மனுதாரருக்கு இவ்வலுவலக கடிதம் வாயிலாக தெரிவிக்கப்பட்டுள்ளது என்ற விபரம் இதன் வழியாக பணிவுடன் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.''

4. மேலும், எதிர்மனுதாரர் தரப்பில் தூத்துக்குடி மாநகராட்சி ஆணையாளரின் கடிதம் ந.க. எண் சி1/2258/2024 நாள் 16.12.2025–ல் கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்.

''ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறையின் 10.12.2025 நாளிட்ட கடிதத்தில், மேற்படி வழக்கின் விசாரணையை விரைந்து முடிக்க உள்ளதால் அதற்கான ஒரு சில ஆவணங்களை வழங்குமாறு கோரப்பட்டது. அதன்படி வழக்கிற்கான ஆவணங்களை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதனடிப்படையில் மேற்படி வழக்கானது தற்போது வரை நிலுவையில் இருந்து வருகிறது என்ற விபரம் இதன் மூலம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.''

5. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 25.03.2026 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 27.02.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

6. மனுதாரர் 25.03.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

''தூத்துக்குடி மாநகராட்சி ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட மல்டிலெவல் பார்க்கிங், காய்கனி மார்க்கெட் அருகில் இயங்கி வருகிறது. மேற்படி மல்டிலெவல் பார்க்கிங் வாகனங்களுக்கான கட்டணத்திற்கு உரிய ரசீது வழங்காமல், ரசீது வழங்கும் கருவி பழுது என்ற பெயரில் சில மாதங்களாக உரிய முறையில் தூத்துக்குடி மாநகராட்சிக்கு வரவேண்டிய வருவாய் தூத்துக்குடி மாநகராட்சி அலுவலக உதவியாளர் கையாடல் செய்ததால், அவர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டார். கணினி பழுதடைந்த பின் Manual ஆக கட்டண வசூல் செய்வதற்கு அவருக்கு எவ்வித ஆணையும் மாநகராட்சியால் அளிக்கப்படவில்லை. பணிநீக்க ஆணையில் கையாடல் பணத்தை ஏழு நாட்களுக்குள் செலுத்தாவிடில் காவல் துறை மூலம் நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது. ஆனால் இதுவரை காவல் துறை மூலம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. மேலும் அலுவலக உதவியாளருக்கு மேலாக பணிபுரியும் சிறப்பு வருவாய் ஆய்வர் (பொ) மற்றும் உதவி வருவாய் அலுவலர் (பொ) ஆகியோர் இதில் சம்பந்தப்பட்டிருந்தும் அவர்கள் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள அலுவலக உதவியாளரை பணி நீக்கம் செய்த நாள் 21.06.2024 ஆகும். ஆனால் பின்பு தூத்துக்குடி மாநகராட்சி பெயரில் ஒரு கட்டண ரசீது அச்சடிக்கப்பட்டு அதன் மூலம் பார்க்கிங்கான கட்டணம் நுழைவு சீட்டு மூலம் வசூலிக்கப்பட்டது. அந்த ரசீதில் எவ்வித கையொப்பமும் தூத்துக்குடி மாநகராட்சியின் முத்திரையும் இல்லை. மேலும், ஓய்வு பெற்ற உதவி வருவாய் அலுவலர் ஜான்சன் என்பவரும் சம்பந்தப்பட்டுள்ளார். சிறப்பு வருவாய் ஆய்வர் (பொ) திரு. ஜேசு நஸ்ரேன் என்பவரும் இதில் சம்பந்தப்பட்டுள்ளார்.

இதன் மூலம் பெரியளவில் ஊழல் நடைபெற்றது ஊர்ஜிதமாகிறது. அதனால் அலுவலக உதவியாளரை பலிகடாக ஆக்கி விட்டு மேல் அதிகாரிகளை காப்பாற்றும்

நோக்கில் தூத்துக்குடி மாநகராட்சியால் மெத்தனமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

எனவே, மாநகராட்சிக்கு வருவாய் இழப்பு ஏற்படுத்திய சம்பந்தப்பட்ட அனைத்து அலுவலர்கள் மற்றும் அதிகாரிகள் மீது ஒரு தலைபட்சமின்றி உரிய நடவடிக்கை எடுத்து வருவாய் இழப்பை உடனடியாக மீட்க தூத்துக்குடி மாநகராட்சி ஆணையர் அவர்களுக்கு உத்திரவிடுமாறு இம்முறைமன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.''.

7. எதிர்மனுதாரர் தரப்பில் தூத்துக்குடி மாநகராட்சி உதவி வருவாய் அலுவலர் 25.03.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

''மனுதாரர் திரு.காளிதாஸ் என்பவர் மீது தூத்துக்குடி மாநகராட்சியில் பணம் கையாடல் குறித்து சுமத்தப்பட்ட புகார் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கையினை தெரிவிக்க கேட்டுக் கொள்ளப்பட்டது. திரு.காளிதாஸ் அலுவலக உதவியாளரை பணி ஏற்பாட்டின் கீழ் மாநகராட்சி மேற்கு மண்டலத்திற்குட்பட்ட இரு சக்கர வாகன காப்பகத்தில் வரும் வாகனங்களுக்கு கட்டணம் வசூல் செய்யும் தொகையினை மாநகராட்சி கருவூலத்தில் செலுத்தி ரசீது பெற்று பதிவேடு பராமரிக்க பணிக்கப்பட்டார். இந்நிலையில் அன்னார் ஏப்ரல் 2024 முதல் ஜூன் 2024 வரை வசூல் செய்த தொகையினை முறையாக கருவூலத்தில் செலுத்தாமல் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது. அதனை தொடர்ந்து தற்காலிக பணியிடை நீக்கம் செய்யப்பட்டார். மேலும் அன்னார் இதனை எதிர்த்து மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு அந்த வழக்கில், உத்தரவு எண்.W.P.No.18769 dt.02.08.2024–ன்படி மனுதாரரை மீண்டும் பணியில் சேர்ந்து தமிழ்நாடு அரசு பணியாளர்களுக்கான ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு விதி 17(b)-ன் கீழ் குற்றச்சாட்டுகள் ஏற்படுத்தப்பட்டு விசாரணை அலுவலர் நியமனம் செய்யப்பட்டு ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் உள்ளது. மேலும், இவர் மீதான குற்றச்சாட்டு குறித்து ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறையிடம் புகார் தெரிவிக்கப்பட்டு அது தொடர்பான ஆவணங்கள் மேற்படி துறையிடம் ஒப்படைக்கப்பட்டு தொடர் நடவடிக்கையில் உள்ளது. மேலும் ஓய்வு பெற்ற உதவி வருவாய் அலுவலர் திரு. ஜான்சன் என்பவர் மீதும் மேல்குறிப்பிட்ட குற்றச்சாட்டு உள்ளதால், அவருக்கு ஓய்வூதியம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது என்ற விவரத்தை இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.''

8. மனுதாரரின் மனு, வாக்குமூலம் மற்றும் எதிர்மனுதாரரான தூத்துக்குடி மாநகராட்சி ஆணையாளரின் அறிக்கை, மேற்கு மண்டல உதவி ஆணையாளரின் அறிக்கை மற்றும் உதவி வருவாய் அலுவலரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறை மன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு, பின்வரும் விவரங்கள் கண்டறியப்பட்டன:–

தூத்துக்குடி மாநகராட்சியின் கீழ் இயங்கி வரும் ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட மல்டிலெவல் பார்க்கிங் காய்கனி மார்க்கெட் அருகில் நிறுத்தப்படும் வாகனங்களுக்கான பார்க்கிங் கட்டணத்தை வசூலிக்க பயன்படுத்தப்படும் ரசீது வழங்கும் கருவி பழுதடைந்ததால் உரிய ரசீது வழங்காமல், தூத்துக்குடி மாநகராட்சிக்கு வரவேண்டிய வருவாயினை தூத்துக்குடி மாநகராட்சி அலுவலக உதவியாளர் கையாடல் செய்ததால், அவர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டார் என்பதும், கணினி பழுதடைந்த பின் Manual ஆக கட்டண வசூல் செய்வதற்கு அவருக்கு எவ்வித ஆணையும் மாநகராட்சியால் அளிக்கப்படவில்லை என்பதும், பணிநீக்க ஆணையில் கையாடல் பணத்தை ஏழு நாட்களுக்குள் செலுத்தாவிடில் காவல் துறை மூலம் நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டும், இதுவரை காவல் துறை மூலம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை

என்பதும், மேற்கண்ட அலுவலக உதவியாளருக்கு மேலாக பணிபுரியும் சிறப்பு வருவாய் ஆய்வர் (பொ) மற்றும் உதவி வருவாய் அலுவலர் (பொ) ஆகியோர் இதில் சம்பந்தப்பட்டிருந்தும் அவர்கள் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதும், மேற்கண்ட அலுவலக உதவியாளரை பணி நீக்கம் செய்த பின்பு தூத்துக்குடி மாநகராட்சி பெயரில் ஒரு கட்டண ரசீது அச்சடிக்கப்பட்டு அதன் மூலம் பார்க்கிங்க்கான கட்டணம் நுழைவு சீட்டு மூலம் வசூலிக்கப்பட்டதற்கான கொடுக்கப்பட்ட ரசீதில் எவ்வித கையொப்பமும் தூத்துக்குடி மாநகராட்சியின் முத்திரையும் இல்லை என்பதும், ஓய்வு பெற்ற உதவி வருவாய் அலுவலர் ஜான்சன் மற்றும் சிறப்பு வருவாய் ஆய்வர் (பொ) திரு. ஜேசு நஸ்ரேன் ஆகியோர் இதில் சம்பந்தப்பட்டுள்ளனர் என்பதும், இதன் மூலம் பெரியளவில் ஊழல் நடைபெற்றது ஊர்ஜிதமாகிறது என்பதும், அதனால் அலுவலக உதவியாளரை பலிகடாக ஆக்கி விட்டு மேல் அதிகாரிகளை காப்பாற்றும் நோக்கில் தூத்துக்குடி மாநகராட்சியால் மெத்தனமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதும், மாநகராட்சிக்கு வருவாய் இழப்பு ஏற்படுத்திய சம்பந்தப்பட்ட அனைத்து அலுவலர்கள் மற்றும் அதிகாரிகள் மீது உரிய நடவடிக்கை எடுத்து தூத்துக்குடி மாநகராட்சிக்கு ஏற்பட்ட வருவாய் இழப்பை உடனடியாக மீட்க தூத்துக்குடி மாநகராட்சி ஆணையருக்கு உத்திரவிடுமாறு கோரியிருப்பது மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலம் ஆகியவற்றின் வாயிலாக அறிய முடிகிறது.

மனுதாரர் தூத்துக்குடி மாநகராட்சி அலுவலக உதவியாளரான திரு.காளிதாஸ் என்பவர் மீது தூத்துக்குடி மாநகராட்சி பணம் கையாடல் குறித்து சுமத்தப்பட்ட புகார் தொடர்பாக, பணி ஏற்பாட்டின் கீழ் மாநகராட்சி மேற்கு மண்டலத்திற்குட்பட்ட இரு சக்கர வாகன காப்பகத்தில் வரும் வாகனங்களுக்கு கட்டணம் வசூல் செய்யும் தொகையினை மாநகராட்சி கருவூலத்தில் செலுத்தி ரசீது பெற்று பதிவேடு பராமரிக்க பணிக்கப்பட்டார் என்பதும், இந்நிலையில் அன்னார் ஏப்ரல் 2024 முதல் ஜுன் 2024 வரை வசூல் செய்த தொகையினை முறையாக கருவூலத்தில் செலுத்தாமல் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டதை தொடர்ந்து, அவர் தற்காலிக பணியிடை நீக்கம் செய்யப்பட்டது தொடர்பாக, அன்னார் இதனை எதிர்த்து மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு W.P.No.18769/2024-ன் உத்தரவு நாள் 02.08.2024–ன்படி மனுதாரரை மீண்டும் பணியில் சேர்ந்து தமிழ்நாடு அரசு பணியாளர்களுக்கான ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு விதி 17(b)-ன் கீழ் குற்றச்சாட்டுகள் ஏற்படுத்தப்பட்டு விசாரணை அலுவலர் நியமனம் செய்யப்பட்டு ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் உள்ளது என்பதும், அவர் மீதான குற்றச்சாட்டு குறித்து ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறையிடம் புகார் தெரிவிக்கப்பட்டு அது தொடர்பான ஆவணங்கள் மேற்படி துறையிடம் ஒப்படைக்கப்பட்டு தொடர் நடவடிக்கையில் உள்ளது என்பதும், ஓய்வு பெற்ற உதவி வருவாய் அலுவலர் திரு. ஜான்சன் என்பவர் மீதும் மேல்குறிப்பிட்ட குற்றச்சாட்டு உள்ளதால், அவருக்கு ஓய்வூதியம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது என்பதும் எதிர்மனுதாரரான தூத்துக்குடி மாநகராட்சி ஆணையரின் அறிக்கை, மேற்கு மண்டல உதவி ஆணையாளரின் அறிக்கை மற்றும் உதவி வருவாய் அலுவலரின் வாக்குமூலம் ஆகியவற்றின் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், தூத்துக்குடி மாநகராட்சியின் கீழ் இயங்கி வரும் ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட மல்டிலெவல் பார்க்கிங் காய்கனி மார்க்கெட் அருகில் நிறுத்தப்படும் வாகனங்களுக்கு வசூலித்த பார்க்கிங் கட்டணத்தை தூத்துக்குடி மாநகராட்சி கணக்கில் செலுத்ததால், தூத்துக்குடி மாநகராட்சி அலுவலக உதவியாளரான திரு.காளிதாஸ் என்பவர் மீது தமிழ்நாடு அரசு பணியாளர்களுக்கான ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு விதி 17(b)-ன் கீழ் குற்றச்சாட்டுகள் ஏற்படுத்தப்பட்டு விசாரணை அலுவலர் நியமனம் செய்யப்பட்டு ஒழுங்கு

நடவடிக்கை நிலுவையில் உள்ளது என்றும், அவர் மீதான குற்றச்சாட்டு குறித்து ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறையிடம் புகார் தெரிவிக்கப்பட்டு அது தொடர்பான ஆவணங்கள் மேற்படி துறையிடம் ஒப்படைக்கப்பட்டு தொடர் நடவடிக்கையில் உள்ளது என்று தூத்துக்குடி மாநகராட்சி, மேற்கு மண்டலம், உதவி ஆணையர் தனது அறிக்கையிலும், உதவி வருவாய் அலுவலர் தனது வாக்குமூலத்திலும் தெரிவித்துள்ளதால், இப்பொருட்பாடு தொடர்பாக ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறையின் விசாரணைக்கு முழு ஒத்துழைப்பை அளிக்குமாறு தூத்துக்குடி மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் அறிவுரை வழங்கி ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 27–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. A. செல்வகுமார்,
கதவு எண் 2–664–1, லெட்சுமிபுரம்,
பொன் சுப்பையா நகர்,
தூத்துக்குடி–628 002.

(2) ஆணையர், தூத்துக்குடி மாநகராட்சி,
தூத்துக்குடி.

(3) உ தவி ஆணையாளர்,
மேற்கு மண்டலம்
தூத்துக்குடி மாநகராட்சி,
தூத்துக்குடி.

(4) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை–600 028.

(5) இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை–600 028.

<u>நகல்:</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரி.

//ஆணைப்படி / அனுப்பப்படுகிறது//

28/4/26

செயலாளர்.

28/4/26